





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடந்த ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டு, சமூக வாழ்க்கைக்குத் திரும்பிய 750 முன்னாள் சிறைவாசிகள் சுயதொழில் தொடங்கி வாழ்வாதாரத்தை வளமைப்படுத்திட மொத்தம் ரூ.3 கோடியே 75 லட்சம் நிதி உதவி வழங்குவதன் அடையாளமாக 10 முன்னாள் சிறைவாசிகளுக்கு காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், சிறைத்துறை தலைவர் (தலைமையிடம்) இரா.கனகராஜ், மதுரை சரக சிறைத்துறை துணைத் தலைவர் ஆ.முருகேசன், தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் பொ.சிவபிரசாத், தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்க கௌரவ பொருளாளர் எஸ்.ஞானேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## தரப்படும் நிதியை, நல்வழியில் பயன்படுத்தி முன்னேறுங்கள்!

# நம்பிக்கையோடு செல்லுங்கள்! புதிய உலகத்தைப் பாருங்கள்! ‘திராவிட மாடல்’ அரசு என்றைக்கும் துணை நிற்கும்!

### முன்னாள் சிறைவாசிகள் 750 பேருக்கு – ரூ.3.75 கோடி நிதிஉதவி வழங்கி

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, பிப். 20 –**

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கம் சார்பில், சிறையிலிருந்து விடுதலை பெற்ற முன்னாள் சிறைவாசிகளுக்கு உதவித் தொகை வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, சிறையிலிருந்து விடுதலை பெற்ற முன்னாள் சிறைவாசிகள் 750 பேருக்கு, திராவிட மாடல் அரசின் மூலம் ரூ.3.75 கோடி மதிப்பிலான உதவித்தொகையை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர் ‘‘சிறை என்பது தண்டனைக்கான களமல்ல, சீர்திருத்தத்துக்கான வாய்ப்பு என்பதுதான் நம் திராவிட மாடல் அரசின் எண்ணம். ஆகவே, விடுதலைபெற்ற முன்னாள் சிறைவாசிகள், இந்த உதவித்தொகையை சரியாகப் பயன்படுத்தி, தம் வாழ்வை வசந்தமாக்கிக் கொள்ள வாழ்த்துகிறேன்’’ என்று குறிப்பிட்டார்.**




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:-

முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச் சங்கத்தின் சார்பாக விடுதலை பெற்ற 750 முன்னாள் சிறைவாசிகளுக்கு 3.75 கோடி ரூபாய் அளவிற்கு உதவித் தொகை வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்று உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த விழாவில் பங்கேற்கும், வாய்ப்பை அளித்த அமைச்சர் அண்ணன் ரகுபதி அவர்கள் மற்றும் சிறைத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலைஞரின் தனிப்பிரியம்**

இந்தத் துறையின் மீது நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எப்போதுமே ஒரு தனிப்பிரியமும், அக்கறையும் உண்டு. `டால்மியாபுரம்’ பெயர் மாற்றும் போராட்டத்தில் `கல்லக்குடி’ தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்து, கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டு, அரியலூர் சிறையிலும், பிறகு திருச்சி சிறையிலும் அடைக்கப்பட்டபோதும் சரி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குபெற்று தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், பாளையங்கோட்டை சிறையில் கிட்டத்தட்ட 62 நாட்கள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டபோதும் சரி, சிறைவாசிகள் சந்திக்கின்ற பிரச்சினைகளை, அவரே நேரில் எதிர்கொண்டவர்தான், உணர்ந்துகொண்டவர்தான், தெரிந்துகொண்டவர்தான்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மட்டுமல்ல, நம் முதலமைச்சர் அவர்கள் கூட சிறைவாசிகளின் கடினங்களை எல்லாம் உணர்ந்தவர்தான். 1976ஆம் ஆண்டு மிசா அடக்குமுறை காலத்தில் ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டு, எல்லா வகையான துயரங்களையும் அனுபவித்தவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

**சிறைகளில் நூலகங்கள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது சொன்னார்கள். அவர் சிறையில் இருந்த நேரத்தில், அவர் இருந்த சிறை அறையிலேயே கழிவறையும் சேர்ந்தே இருந்தது. அதனின் நாற்றம் மூக்கைத் தொலைத்தது. அந்த நாற்றத்தைத் தவிர்ப்பதற்காக பூட்டப்பட்ட கம்பி கதவுகளுக்கு பின்னால் நின்றுகொண்டு மூக்கை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு இரவு முழுவதும் நின்றுகொண்டே தூங்கி இருக்கிறார். அப்போது, `சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்ட உணவு தரமில்லாததாக இருந்தது’ என்பதையும் பேசி இருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான், சிறைவாசிகளுக்கு சுகாதாரமான கழிப்பறை வசதிகளையும், நல்ல உணவுகளையும் வழங்க, முதன்முதலாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்றைக்கு `திராவிட மாடல் அரசு’, சிறைச்சாலைகளுக்குள் நூலகங்களை ஏற்படுத்துவதில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. நம் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு சிறைத்துறை வரலாற்றில் முதன்முறையாக 2 கோடி ரூபாய் செலவில், சிறை நூலகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

சிறைத்துறை நூலகங்களுக்காக நம் முதலமைச்சர் அவர்கள் அவருக்குப் பரிசாக வந்த 1,500 புத்தகங்களை சிறைத்துறைக்கு வழங்கி இருக்கிறார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு நடத்துகின்ற புத்தகக் காட்சிகளில் சிறைவாசிகளுக்குப் புத்தகங்கள் வழங்குவதற்கான தனி அரங்கு அமைக்கப்பட்டு வருகிறது. அதில் பொதுமக்கள் பலரும், பொது அமைப்புகளும் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்குவதை நாம் தொடர்ந்து பார்க்கிறோம். எனக்கு அன்பளிப்பாக வருகின்ற புத்தகங்களைகூட, சென்னை புத்தகக் காட்சி போன்ற நிகழ்வின் மூலம் சிறை நூலகங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். கடந்த 2023 ஆம் ஆண்டு, நானே புழல் சிறைக்கு நேரில் சென்று புத்தகங்களைப் பரிசாக, சிறைவாசிகளுக்கு எனது கைகளாலே கொடுத்தேன்.

**சிறைகளில் சத்தான உணவு!**

அந்த காலத்தோடு ஒப்பிடும்போது, இப்போது சிறையில் இன்னும் பல வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு இப்போது அசைவ உணவுகளும், சத்தான உணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற பிற மாநிலங்களைவிட, தமிழ்நாடு அரசு சிறைத்துறை, ஒரு முன்மாதிரியாக திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

சிறைவாசிகளின் சீர்திருத்தத்திலும், மறுவாழ்வுக்கான முன்னெடுப்பிலும், சிறைவாசிகளின் நலனிலும் கூடுதல் அக்கறை உள்ள அரசாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

ஏனென்றால், சாதாரணமாக இருப்பவர்களுக்கு உதவி செய்வது, உயர்த்துவது என்பது வேறு. ஆனால், உடைந்து போன மனிதர்களுக்கு பக்கத் துணையாக இருந்து, அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்வது என்பது வேறு. இது மிகவும் சவாலான பணி. சிறையை நாங்கள் எப்போதுமே தண்டனைக்குரிய இடமாக பார்ப்பதில்லை. அதனை, சீர்திருத்துவதற்கான ஒரு இடமாகத்தான் இந்த அரசு பார்க்கிறது.

ஒரு நொடிப்பொழுதில் ஏற்பட்ட கோபம் காரணமாக, குற்றம் செய்து சிறையில் தண்டனை பெற்று இருக்கலாம் அல்லது சூழ்நிலை காரணமாக சிலர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு, தண்டனையைப் பெற்று இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் நடந்தவை, நடந்தவையாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் ஏற்பட வேண்டும். அதனால், சிறையில் இருப்பவர்களுக்குச் செய்யப்பட்ட வசதிகளைவிட, சிறையில் இருந்து விடுதலை பெற்று வெளியே செல்பவர்களின் நலனிலும் அக்கறை உள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த நிகழ்ச்சி இங்கு ஏற்பாடு செய்யப்பட்டு, சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**தனித்துவமான முன்னெடுப்பு!**

சிறைவாசம் முடிந்து வெளியே செல்பவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், உதவி செய்யும் வகையில், ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் பொருளாதார ரீதியான உதவிகள் செய்வதுதான் உண்மையிலேயே முழுமையான சமூக சீர்திருத்த நடவடிக்கை ஆகும். அதற்காக தொடங்கப்பட்டதுதான் தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச் சங்கம்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், `தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கம்’ என்பது நம் மாநிலத்தில் மட்டும்தான் இருக்கிறது என்பது, நம் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் சிறப்பு. இந்த நலச்சங்கம் 1921ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தாலும், இந்த சங்கத்தின் வரலாற்றிலேயே இரண்டே முதலமைச்சர்கள்தான், இந்த சங்கத்தின் நிகழ்ச்சிகளில், மேடைகளில் கலந்துகொண்டுள்ளார்கள். தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1972ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த சங்கத்தின் பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார். அதேபோல், நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த 2023ஆம் ஆண்டு சிறையில் இருந்து விடுதலை பெற்ற முன்னாள் சிறைவாசிகள் 660 பேருக்கு 3 கோடியே 30 லட்சம் ரூபாய் உதவித்தொகையை இதே மேடையில் வழங்கினார்.

இன்றைக்கு விடுதலைபெற்ற 750 சிறைவாசிகளுக்கு 3 கோடியே 75 லட்சம் மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்படும் நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்கிறேன்.

இந்த உதவியைப் பெற்றுக்கொண்டு நீங்கள் அனைவரும் கடந்த காலத்தை மறந்து, எதிர்காலத்தைப் பற்றி மட்டும் சிந்தித்து, உங்களின் குடும்ப நலனை மட்டும் சிந்தித்து, உங்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்களின் நலனை மட்டும் சிந்தித்து நல்ல வண்ணம் உங்கள் வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டும்.

உங்களுக்குத் தரப்படுகின்ற நிதியை ஒரு நல்ல வழியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் எல்லா வகையிலும் உங்களுக்குத் துணை நிற்கும். நம்பிக்கையோடு செல்லுங்கள், புதிய உலகத்தைப் பாருங்கள் என்று கூறி, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் ரகுபதி அவர்களுக்கும், வந்திருந்த அத்தனைப்பேருக்கும் மீண்டும் எனது நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகர மேயர் பிரியா, உள்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார் ஐ.ஏ.எஸ்., காவல்துறைத் தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் ஐ.பி.எஸ்., சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் துணைத் தலைவர் முனைவர்.மகேஷ்வர் தயாள் ஐ.பி.எஸ்., சிறைத்துறைத் தலைவர் கனகராஜ், சிறைத்துறைத் துணைத் தலைவர் முருகேசன், தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் சிவபிரசாத், தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச் சங்கத்தின் கௌரவப் பொருளாளர் ஞானேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.